[2nd November 1966

கனம் திரு. பூ. கக்கன் : உசிலம்பட்டியைப் பொறுத்த வரையில் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும், அங்கிருந்து தேனி, கம்பம் போன்ற இடங்களுக்குப் போகவேண்டுமென்று சொன்னால் டர்னிங் போய்தான் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, பொது ஜனப் போக்குவரத்துக்கு எங்கே இடையூறு இருக்கிறதோ அங்கே தான் அப்புறப்படுத்துவார்கள்.

திரு. க. ர. நல்லசிவம் : பொதுஜனப் போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்யவேண்டுமென்று வைத்துக்கொண்டிருப்பவர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. இடைஞ்சல் இல்லாத இடங்களில்கூட ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் ஆட்சேபக் குறிப்பு எழுதிவிட்டால் உடனே அப்புறப்படுத்திவிடுகிறார்கள். ஆகவே, அப்படியில்லாமல் மிக நெருக்கடியான இடங்களிலேயிருந்து வெளியேற்றுவதற்கும், அவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுப்பதற்கும், போக்குவரத்து ஓரளவுக்குப் பாதகம் இல்லாமல் போகமுடியும் என்ற இடங்களிலே வெளியேற்றாமல் பாதுகாப்புக் கொடுப்பதற்கும், ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் பொதுவாகப் பேசுகிறார்கள். எங்காவது அந்த மாதிரிப் பொதுஜன போக்குவரத்து இடையூறு இல்லாத இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் இருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஏரல் பாலம்

*** 322 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா, ஏரல் பாலத்தின் தென்கரை அப்ரோச் ரோடு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டபடி அமைக்கப்படுகிறதா ?

(இ) இல்லை எனில், காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The original alignment of the South Approach road has been revised. The original alignment cut across costly wet lands and split them up. The revised alignment is shorter in length and avoids acquisition of costly occupied wet lands. It is laid on a flood bank on land belonging to Government. Adequate safeguards are being taken by providing wider blacktopped surface at curves, and hand-rails and safety guards with painted tar drums at intervals.

*** 323 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா ஏரல் பாலத்தின் உத்தேசச் செலவென்ன ?

2nd November 1966]

(இ) அப் பாலம் தற்போது அமைக்கப்படுவதைவிட உயரமாக மாற்றி அமைக்குமாறு அப் பாலத்திற்கு அஸ்திவாரமிட்ட காலத்திலிருந்தே தொடர்ந்து பொது மக்களிடமிருந்தும், ஸ்தாபனங்களிலிருந்தும் முறையீடுகள் சர்க்காருக்கு வந்து கொண்டுள்ளனவா ?

(உ) அக்கோரிக்கைகளின் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The estimated cost of the causeway across the Thambaraparani at Eral is Rs. 7.20 lakhs.

(*b*) Yes, representations have been received from the public.

(*c*) The representations have been examined and it has been found that the present design is adequate to meet observed flood conditions.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவரத்திலிருந்து, அந்த ரோடுக்காக ஆரம்பத்தில் ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்றிருந்த நிலங்கள் அலே மதிப்புள்ள நஞ்சை நிலங்களாய் இருந்தன என்ற விவரம் தெரிகிறது. ஆனால், இரண்டாவது தரம் போட்ட பிளான் கூட மாற்றப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஒரு சிறு பகுதி நஞ்சையாக இருந்ததால் விட்டுவிட்டார்கள். பிறகு முற்றிலும் புஞ்சைப் பகுதியாகவே இருக்குமிடங்களிலே போடுவதற்குத் திட்டமிட்டு ஏறக்குறைய எல்லாப் பகுதிகளிலும் ரோடு போடப்பட்டுவிட்டது. ஆனால், அது அழிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சைப் பகுதியில் போடுவதை விட்டுவிட வேண்டிய அவசியமில்லை. இதனால் அந்தப் பகுதியின் குறுக்கே ஓடுகின்ற பாய்மான வாய்க்காலுக்கு மண்ணினால் சேதம் வந்திருப்பதாகவும், பாய்மான வசதிகள் குறைவதாகவும் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் முறையிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : விவசாயிகள் முறையீடு சம்பந்தமாய் விவரம் ஒன்றுமில்லை. அதை மாற்றி அமைப்பதற்குப் பல முயற்சிகள் நடந்தன. கடைசியாக சீஃப் எஞ்சினியர் அவர்களே நேரடியாகப் போய்ப் பார்த்துப் பரிசீலனை செய்து ப்ளான் வந்து, அந்தப் ப்ளானைத்தான் அரசாங்கம் அங்கீகாரம் செய்திருக்கிறது.

கலெக்டரிடம் நேரிடை மனுக்கள்

*324 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் 1965 ஜனவரி முதல் இன்று வரையில் கலெக்டரிடம் கொடுக்கப்பட்ட திங்கட்கிழமை தோறும் வரும் குறைகளை தெரிவிக்கும் மகஜர்கள் (Monday petitions) எத்தனை ?